# விலைக்கேள்விக்கான கோரல்(IFB - 25)

# கட்டடங்கள் திணைக்களம்,வடமாகாணம்

1. வடமாகாண கட்டடங்கள் திணைக்கள, திணைக்களப் பெறுகைக்குழு / பிரதம செயலாளர் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
3. விலைக்கேள்வியாளர்கள் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் **Bidding Data & Contract Data** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறைகொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள், கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரிகளில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குரிய வேலைகளின்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரிகளில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப 4.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை
   a. **பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-2222632 தொலைநகல் 021-2222632)**
   b. **பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம்,வடக்கு மாகாணம், கண்டி வீதி, வவுனியா. (தொலைபேசி இல: 024-2223394 தொலைநகல் 024-2222284)**

   **எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 02.07.2018** முதல் **23.07.2018** வரை **மு.ப 9.00 மணியிருந்து பி.ப 3.00 மணி வரையான** காலப்பகுதியில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) **24.07.2018ம்** திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், திணைக்களப் பெறுகைக்குழு / பிரதம செயலாளர் பெறுகைக்குழு, மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்**. காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் **மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும்** முகவரியில் **16.07.2018** அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப் படாத தொகை | தேவையான தரம் | கேள்விப் பிணை விபரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை | தேவைப்படும் காலம். |
| NP/B/JA/32 (2018) | யா/மானிப்பாய் சென்.அன்ரனிஸ் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் வகுப்பறைக் கட்டடம் (110×25×3) நிர்மாணித்தல் | 26.00 | 217 நாட்கள் | 10,000.00 | C5 or C4* (கட்டடங்கள்) | 260,000.00 | 19.11.2018 வரை |
| NP/B/JA/33 (2018) | தீவகம் வலயக்கல்வி அலுவலகத்தில் (120×30×3) அலுவலகக் கட்டடம் நிர்மாணித்தல் | 51.36 | 238 நாட்கள் | 15,000.00 | C4 or above (கட்டடங்கள்) | 514,000.00 | 19.11.2018 வரை |
| NP/B/VA/15 (2018) | வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் (120×30×2) அலுவலகக் கட்டடம் நிர்மாணித்தல் | 51.20 | 238 நாட்கள் | 15,000.00 | C4 or above (கட்டடங்கள்) | 512,000.00 | 19.11.2018 வரை |

* 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை கருத்தில் கொள்ளப்படும்.

தவிசாளர்
திணைக்களப் பெறுகைக்குழு / பிரதம செயலாளர் பெறுகைக்குழு
கட்டடங்கள் திணைக்களம்
வடமாகாணம்